**<u>20.02.2025</u>** **<u>அசல் வழக்கு எண்.89/2013</u>**

**<u>வா.சா.1</u>** **திரு.அப்துல் முனாப் த/பெ._சையத் ஜானி பாஷா**

**<u>சாட்சிய சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

**ஆக்ரமிப்புகளை அகற்ற யார் எல்லாம் வந்திருந்திருந்தார்கள் என்றால் வருவாய் துறையில், நகராட்சி ஆணையரும், தாசில்தாரும், சர்வேயரும் அவர்களுடைய உதவியாளர்களும் வந்திருந்தார்கள். காவல் துறையில் போலிசார் வந்திருந்தார்கள். சுமார் 4,5 போலிசார் வந்திருந்தார்கள். எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால், காலை 10.15 மணி அளவில் வந்தார்கள். தாசில்தாரும், ஆணையரும் உத்தரவிட்டதன்பேரில் சர்வேயர் இடத்தை அளந்தாரா என்றால் அதை நான் பார்க்கவில்லை. முள்வேலியை அகற்றினார்கள். எந்த அளவுகளில் ஆக்ரமிப்புகளை அகற்றினார்கள் என்று என்னால் அளவுகள் கூற முடியுமா என்றால், அளவுகள் தெரியவில்லை. முழு வேலியையும், அடப்பையும் அகற்றிவிட்டார்கள். எந்த அளவுகளில் அவ்வாறு முள்வேலியை அகற்றினார்கள் என்று நான் வருவாய் துறையினரிடம் கேட்டேனா என்றால் ஆக்ரமிப்பு இருந்த பகுதிகளை அகற்றிவிட்டதாக கூறினார்கள். இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது நான் 26.12.2014 அன்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கொடுத்த புகாரின் அடிப்படையில் தாவா இடத்திற்கு வந்து மேற்படி ஆக்ரமிப்புகளை அகற்றினார்கள் என்றால் சரி தான். அவ்வாறு தாவா சொத்தில் ஆக்ரமிப்புகளை அகற்றிய பின்பு தாவா சொத்தில் திருத்தம் மேற்கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டு நான் மனு எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. அவ்வாறு ஆக்ரமிப்புகளை அகற்றிய பின்பும் ஏன் தொடர்ந்து இந்த தாவாவை நடத்துகிறேன் என்றால், எங்கள் பட்டா நிலத்திற்கு செல்லவேண்டிய சாலை புறம்போக்கை கட்டிடம் மற்றும் முள்வேலி அமைத்து ஆக்ரமிப்பு செய்து வைத்துள்ளனர். அதை அகற்றவேண்டும் என்பதற்காக தாவாவை நடத்துகிறேன். நான் ஆக்ரமிப்புகளை அகற்றிய பின்பும் வேண்டுமென்றே பிரதிவாதிகளுக்கு தொல்லை கொடுக்கவேண்டும் என்பதற்காக இந்த தாவாவை நடத்துகிறேன் என்றால் சரியல்ல. ஆக்ரமிப்புகளை அகற்றிய பின்பு போலிசார் மற்றும்**

வருவாய் துறையினர் எங்களை கம்பிகள் அமைத்து பென்சிங் போட சொல்லிவிட்டார்கள். நாங்களும் பென்சிங் போட்டுவிட்டோம். வா.த.சா.ஆ.33 சி.எஸ்.ஆர். சம்பந்தமாக நான் கொடுத்த புகார் மனுவின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் அவ்வாறு தாக்கல் செய்யாமல் இருந்தால் அதை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். நான் கொடுத்த புகார் மனுவின் சாராம்சத்தை தான் சி.எஸ்.ஆரில் மனுவின் சாராம்சம் என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த சாராம்சத்தில் வாதியின் பட்டா நிலத்தில் அத்துமீறி பிரதிவாதிகளான யாக்கோப், ஷப்பு ஆகியோர் ஆக்ரமிப்பு செய்துள்ளதை வாதி கேட்கும்போது தகராறு செய்ததாக புகார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா நிலத்தில் எவ்வளவு இடத்தை ஆக்ரமிப்பு செய்தார்கள் என்று கூற முடியுமா என்றால் சுமார் 200 சதுரடி இடத்தை ஆக்ரமிப்பு செய்தார்கள். நான் கொடுத்த புகார் அடிப்படையில் போலிசார் எங்களை அழைத்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அந்த விசாரணையில் என்ன முடிவு செய்யப்பட்டது என்றால் பிரதிவாதிகளை பட்டா இடத்திற்குள் நுழையக்கூடாது என்றும், மீறி நுழைந்தால் நடவடிக்கை எடுப்போம் என்றும் கூறினார்கள். நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும், ஆக்ரமிப்பு செய்ததாக கூறும் இடம் என்னுடையதே அல்ல என்றாலும் சரியல்ல. நான் ரியாசத் அலி என்பவரிடமிருந்து 10.5.2012 அன்று கிரயம் பெற்ற சொத்தில் அலிஜான் சாகிபு மனைவி சோட்டிமாபி மெத்தை வீட்டின் நேர் பின்புறம் உள்ள சொத்துக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ள பட்டா சொத்தில் தான் பிரதிவாதிகள் அது அவர்களது பூர்வீக சொத்து என்பதால் அதில் ஆக்ரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளார்கள் என்றாலும், நான் குறிப்பிடுவது போல் எந்த ஆக்ரமிப்பும் பிரதிவாதிகள் செய்யவில்லை என்றாலும், அவர்கள் பூர்வீக சொத்தில் இருந்து அவர்களை அகற்றவேண்டும் என்பதற்காக பொய்யாக குறிப்பிட்டு ஒரு புகார் மனுவை நான் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு நான் பொய்யாக குறிப்பிட்டு புகார் மனு கொடுத்திருந்தால் தான் அந்த புகார்

மனுவையும், அதன் முடிவை குறித்த ஆவணத்தையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சாலை புறம்போக்கில் பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது பட்டா இடம் என்றாலும், அதனால் தான் புறம்போக்கு இடத்தில் இருந்த ஆக்ரமிப்புகளை மட்டும் அகற்றிவிட்டதால் நான் கொடுத்த புகார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்ன காரணத்திற்காக வா.த.சா.ஆ.34 கிரயப்பத்திரத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சோட்டிமாபி ஏற்கனவே இடம் வாங்கி அதில் 3 சதுரத்தில் ரூ.30,00,000/- மதிப்பில் வீடு கட்டியுள்ளார் என்பதற்காகவும், எனவே அவர் புறம்போக்கில் ஆக்ரமிப்பு செய்யவேண்டிய தேவையில்லை என்பதை காண்பிப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் அவர்களுடைய பூர்வீக சொத்தில் வீடு கட்டியிருப்பதை திசை திருப்புவதற்காக ஆக்ரமிப்பு செய்துள்ளார்கள் என்று பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.35 புகைப்பட நகலை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சோட்டிமாபி மற்றும் அவருடைய மகன்கள் வீடு கட்டுவதற்காக அடித்தளம் போட்டதை காண்பிப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். அந்த புகைப்படத்தில் உள்ள வீடு பிரதிவாதிகளுக்கு தான் சொந்தமானது என்பதை காண்பிக்கக்கூடிய எந்தவொரு தகவலும் சர்வே எண்ணும் அதில் இல்லை என்றாலும், யாரோ, எங்கேயோ கட்டிய வீட்டை பிரதிவாதிகள் கட்டிய வீடு என்று பொய்யான புகைப்படத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வா.த.சா.ஆ.35 ஆவணத்துடன் பிளான் என்று குறிப்பிட்டு ஒரு ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதை யாரிடமிருந்து வாங்கினேன் என்றால் நகராட்சியிடம் இருந்து வாங்கினேன். எந்த அடிப்படையில் வாங்கினேன் என்றால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வாங்கினேன். நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் அந்த நகலை பெற்றிருந்தால் அவ்வாறு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டதற்காக விவரத்தை குறிப்பிட்டு முத்திரையிட்டு கையொப்பம் செய்திருப்பார்கள் என்றாலும், நான் அவ்வாறு பெற்றதாக பொய்யாக

கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. அந்த ஆவணத்தை நான் இந்த வழக்கிற்காக பொய்யாக உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.36 புகைப்படங்களானது ஆக்ரமிப்புகளை அகற்றும்போது புகைப்படகலைஞர் மூலம் போட்டோ எடுத்து அதை சி.டி. உடன் பெற்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த புகைப்படங்களை வட்டாட்சியருக்கும் கொடுத்துள்ளேன். அந்த புகைப்படத்தில் ஜே.சி.பி. மூலம் நகராட்சியினர் ஆக்ரமிப்புகளை அகற்றி லாரியில் ஏற்றி சென்றுவிட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். ஆக்ரமிப்புகளை அகற்றியபின்பு நான் முள்வேலி அமைத்துள்ள புகைப்படமும் அதில் உள்ளது என்றால் சரிதான். ஆக்ரமிப்புகளை அகற்றிய பின்பு அது சம்பந்தமாக எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். ஒரு பாகத்தை தான் அகற்றினார்கள். மீதி ஆக்ரமிப்பு பாகத்தினை அகற்றவேண்டும் என்று நகராட்சினருக்கோ, வட்டாட்சியருக்கோ புகார் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த புகார் மனுவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் பார்த்துவிட்டு செய்கிறேன். ஆக்ரமிப்புகளின் ஒருபகுதியை அகற்றிவிட்டார்கள் என்றும், மீதம் உள்ள பகுதியில் தான் ஆக்ரமிப்புகள் உள்ளது என்றும் குறிப்பிட்டு தாவாவில் திருத்தம் ஏதேனும் மேற்கொண்டுள்ளேனா என்றால் இல்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/- ஆர். பாக்யராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி. (மு.கூ.பொ.)